

இ
மயங்கள்
14

# இளைய இமயங்கள் 14

**நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர், நாம் பரிசுத்தராய் இருப்பதால், நீங்களும் பரிசுத்தராய் இருங்கள்.** லேவி 19: 2

**இதயாலயா**
மேலபுத்தமங்கலம்,திருநள்ளார் ரோடு,
காரைக்கால் - 609 607.
தொலைபேசி: 04368-23692

## அர்ப்பணம்

அருட்செல்வி ராணி மரியா போன்ற

பாரதத்தின் இளவல்களுக்கு

தலைப்பு: இளைய இமயங்கள் 14

பொருள்: இளையோரும், புனிதமும்

தொகுப்பு: அருட்செல்வி பெர்னார்டு லூர்து மேரி,

அச்சு: ஜேம்ஸ் ஆர்ட்ஸ், சிவகாசி

நன்கொடை: ₹ 20

**தனிச் சுற்றுக்கு மட்டும்**

இளையோரே,

**நீங்கள் வலிமை வாய்ந்தவர்கள்.** 1 யோவா 2: 14

இளையோராண்டில் எங்களது தூய இருதய மரியன்னையின் சபை சார்பில் நல்வாழ்த்துக்களை பரிமாறிக் கொள்கின்றேன்.

**நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம்.** 1 தெச 4: 3

பவுல் அடிகளாரின் அழைப்பையேற்று, நாம் நம்முடைய வாழ்வில், அவர் தூயவராய் இருப்பது போல நாமும் தூயவராவோம், என்று இந்த சிறிய முயற்சியை நனவாக்குகின்றோம். வாழ்ந்தவர்கள் பல பேர் போராட்டங்களின் மத்தியில், இரத்தம் சிந்தி தங்களை தூயவராகி யிருகின்றனர். இவர்களது வாழ்வின் பாடம் நமக்கு நல்ல மாதிரிகை.

**நீ கற்று, உறுதியாய் அறிந்தவற்றில் நிலைத்து நில்.** 2 தீமோ 3: 14

33 வயதில் போராடி, மரணத்தையும் வெற்றி கண்டு இன்று பல நூறு பேரிலே வாழ்ந்து வரும் நம் இறை இயேசுவின் வாழ்வு உங்களதாகட்டும்.

**தூய்மை உடல், உள்ளம், மனது என முழுமையானதாகட்டும்.** 1தெச 5: 23

மனதார உங்களது தூய வாழ்வுக்கு செபங்களுடனே வாழ்த்துகின்றேன். இந்த உழைப்பிலே உடன் பயணித்த திரு அன்பரசன், தங்கைகள் கத்தரின், பவுலின், சிவகாசி ஜேம்ஸ் ஆர்ட்ஸ் இவர்களுக்கு என் நன்றிகள்.

வாழ்வின் தூய்மையினால் வளமும், தனி மனித வளத்தினால் நலமும், இதனால் சமூகம் அழகு பெறட்டும். நம் பிறப்பு அர்த்தம் பெறட்டும். இறைவனுக்கே எல்லாப் புகழும் மகிமையும்.

நல்வாழ்த்துக்கள்! நன்றி!

என்றும் அன்புடன்,

அருட்செல்வி பெர்னாட்டு லூர்து மேரி

இதயாலயா, மேலபுத்தமங்கலம்,

திருநள்ளார் ரோடு, காரைக்கால் - 609 607.

தொலைபேசி: 04368-23692, 98942 56502.

மெயில்: idhayalayafihm@gmail.com, asblourdoumary@gmail.com



**புனித தோமினிக் சாவியோ**

காலம் :- கி.பி. 1842 - 1857

விழா :- மே 6

# 1. புனித தோமினிக் சாவியோ

புனித தோமினிக் சாவியோ மாணவ மாணவியருக்கேற்ற ஒரு புனிதர். சலேசிய சபையை நிறுவிய புனித தொன்போஸ்கோவின் முதல் மாணவன் புனித தோமினிக் சாவியோ. இவர் இத்தாலி நாட்டின் வடபகுதியில் முரியால்டோ என்னும் ஊரில் பிறந்தார். பெற்றோர் சார்லஸ் சாவியோ, பிரிஜித்தம்மாள் ஆவர். பெற்றோர் புனித தோமினிக் சாவியோவை அன்னை மரியாளின் பக்தியில் வளர்த்தனர்.

இவர் பக்தியில் வளர்ந்ததற்குக் காரணம் அந்த ஊர்கோயில் தான். தோமினிக் தம் ஆறாம் வயதிலேயே திருப்பலியில் பீடச்சிறுவனாக உதவி செய்ய ஆசைப்பட்டார். பனிக்காலம், வெயில் காலம் என்று பார்க்காமல் நாள்தோறும் காலையில் கோயிலுக்குப் போய்விடுவார். ஒரு நாள் தோமினிக் தம் 7ஆம் வயதில் "எனக்கு எப்பொழுது இயேசுவைக் கொடுப்பீர்கள்?" என்று பங்குத் தந்தையிடம் கேட்டார். அப்பொழுதெல்லாம் 11ஆம் வயதில் தான் புதுநன்மைப் பெறலாம். ஆனால் தோமினிக்கின் ஆர்வத்தையும், பக்தியையும் பார்த்த பங்குத்தந்தை 7ஆம் வயதிலேயே அவருக்குப் புதுநன்மை வழங்கினார்.

தோமினிக் தினமும் பள்ளிக்கூடத்திற்கு 10மைல் தொலைவு நடந்தே செல்வார். அச்சமயம் தொன்போஸ்கோ அவ்வூருக்கு வந்தார். அவர் டூரின் நகரில் நூற்றுக்கணக்கான மாணவர்களுக்குப் பள்ளி ஒன்றை நடத்தி வந்தார். எனவே அவரிடம் பங்குத் தந்தை தோமினிக் சாவியோவைப் பற்றிக் கூறினார். உடனே தொன்போஸ்கோ அச்சிறுவனைக் காண விரும்பினார். அவர் அவனிடம் "தோமினிக் நீ ஒரு நேர்த்தியான துணி. அந்தத் துணியைக் கொண்டு நீ என்ன செய்வாய்?" என்று கேட்டார், அப்பொழுது சிறுவன் "இத்துணியைக் கொண்டு இயேசுவுக்கு ஒரு நல்ல ஆடையைச் செய்வேன்" என்றார். "நான் தான் துணி, நீங்கள் தான் தையல்காரர், நான் என்னையே உங்கள் கையில் ஒப்படைக்க தாயாராக இருக்கிறேன்" என்றார்.

மேலும் அவர் அச்சிறுவனுக்குப் படிக்கும் திறமை இருக்கிறதா? என்று சோதித்துப் பார்த்தார், அதிலும் அவருக்கு மனப்பாடம் செய்யும் திறமை உண்டு என்பதை அறிந்து கொண்டு அவரை ஏற்றுக் கொண்டார். தொன்போஸ்கோவின் அறைச்சுவரில் இலத்தீன் மொழியில் ஐந்து சொற்கள் எழுதப்பட்டிருப்பதைப் பார்த்தார் தோமினிக். “Da Mihi animas Caetra tolle” இதை உன்னால்

மொழிபெயர்க்க முடியுமா? என்றார். "எனக்கு ஆத்துமங்களைத் தாரும்" என்று முதல் பொருளை கூறிய அவர் மற்ற இரண்டிற்கும் பொருள் புரியாமல் திகைத்தார்.

"மற்ற யாவற்றையும் எடுத்துக் கொள்ளும்" என்று இரண்டாவது வார்த்தைக்கு பொருள் கூறினார் தொன்போஸ்கோ. இதுவே இவரின் விருதுவாக்கு.

தோமினிக் சில நாட்களாக முகம் வாட்டமாக இருப்பதை கவனித்த தொன்போஸ்கோ அவனை தனியே அழைத்து, "தோமினிக் ஏன் உடல்நிலை சரியில்லையா?" என்று கேட்டார். அதற்கு தோமினிக் "அப்படி ஒன்றுமில்லை, ஒரு புனிதனாக முயற்சி செய்கிறேன்" என்றார். "புனிதமாக வாழ்வது கவலையோடு இருப்பதாக அர்த்தமல்ல. சிரித்த முகத்தோடு கடவுளின் திட்டத்தை நிறைவேற்றுவது தான். இது ஒய்வு நேரம் போய் விளையாடு" என்றார் தொன்போஸ்கோ. இதில் இருந்து ஓர் புதிய பாடத்தைக் கற்றுக்கொண்டார்.

ஒரு நாள் இரு பெரிய பையன்கள் சண்டையிட்டு கொண்டு இருந்தனர். தோமினிக் அதை நிறுத்த முயற்சி செய்தார், முடியவில்லை. இருவரும் அடுத்த நாள் பல வித பகைமையுணர்வோடு கற்களுடன் வந்தனர். அந்நேரம் தோமினிக் பாடுப்பட்ட சுருபத்தைக் காட்டி 'சிலுவையில் இயேசுவைப் பாருங்கள்' என்று சொல்லி சமாதானம் செய்து வைத்தார்.

இன்னொரு நாள் தோமினிக், தொன்போஸ்கோவின் கதவைத் தட்டி "சுவாமி விரைவில் வாருங்கள், உங்களைப் பார்க்க நோயாளி ஒருவர் விரும்புகிறார்" என்று சொன்னார். "அது உனக்கு எப்படித் தெரியும்?" என்றார் தொன்போஸ்கோ. "இதை அப்புறம் சொல்கிறேன், இப்பொழுது வாருங்கள்" என்று, டூரின் நகரூரின் சந்துப் பொந்துகள் வழியாக அழைத்துச் சென்று ஒரு மூன்று மாடி வீட்டிற்கு இருவரும் சென்றார்கள். அங்குச் சாகும் தருவாயில் இருந்த விசுவாசம் இல்லாத ஒருவர் இறக்கும் முன் கடவுளோடு ஒப்புரவாகி நல்ல மரணமடைந்தார்.

தோமினிக் 15ஆவது வயதில் நோய் வாய்ப்பட்டு 1857 ஆம் ஆண்டு மார்ச் 9ஆம் நாள் இறந்தார். 1954ஆம் ஆண்டு அவருக்குப் புனிதர் பட்டம் அளிக்கப்பட்டது.

"**பாவம் செய்வதை விட சாவதே மேல்**" என்பது அவரது விருது வாக்கு.



**புனித மரிய கொரெற்றி**

காலம் :- கி.பி 1890 - 1902

விழா :- ஜீலை 6

## 2. புனித மரிய கொரெற்றி

புனித மரிய கொரெற்றி 20-ஆம் நூற்றாண்டின் புனித ஆக்னெஸ் எனப்படுபவர். இத்தாலி நாட்டின் கொரியால்டோ என்னும் ஊரில் ஓர் ஏழை விவசாயத் தொழிலாளிக்கு மகளாகப் பிறந்தார் மரியா, குடும்பத்தில் மொத்தம் 7குழந்தைகள். வறுமையின் காரணமாக மரியாவின் தம்பி, தங்கைகள் பள்ளிக்குச் செல்ல முடியவில்லை. இருப்பினும் இவர்களின் தாய் அசுந்தா அவர்களை கிறிஸ்தவ நெறியில் வளர்த்து வந்தார்.

மரியாவின் தந்தை வேலை வாய்ப்பிற்காக, நெட்டூனோ என்னும் புதிய ஊருக்கு தம் குடும்பத்தை அழைத்து வந்தார். அவர்களுடன் செரொனெல்லி என்னும் நண்பர் ஒருவரும் தம் மகன் அலெசாண்ட்ரோவுடன் நெட்டூனோ என்னும் புதிய ஊருக்கு வந்து தங்கினார். அச்சிறுவனின் தாய் ஏற்கனவே இறந்துவிட்டாள். அவன் அவ்வூரில் பலதரப்பட்ட மக்களுடன் சேர்ந்து பல தீயப்பழக்க வழக்கங்களைக் கற்றுக் கொண்டான். தன் தந்தையுடன் நெட்டூனோவில் வாழலானான்.

அடுத்த வருடமே மரியாவின் தந்தை இறந்து விட்டார். மரியாவின் தாய்க்கு தன் குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் தினமும் காலையிலேயே வயல் வேலைக்குப் போய்விடுவாள். மரியா தினமும் வீட்டு வேலை முழுவதையும் செய்வாள். தனது 11-ஆம் வயதில் புதுநன்மை பெற்றார். 7 மைல் தொலைவில் கோயில் இருந்த பொழுதிலும் தினமும் நடந்தே செல்வார்.

தனது 12-ம் வயதில் எதிர்பாராத நிகழ்ச்சி ஒன்று மரியாவுக்கு நடந்தது. அலெக்சாண்ட்ரோ என்பவன் பலமுறைக் காமவெறியுடன் அவரை அடைய முயன்றான். ஆனால் மரியா அதற்கு ஒத்துப் போகவில்லை, அவன் அவள்மேல் கோபத்துடன் இருந்தான். அதனால் இதை உன் தாயிடம் சொல்லிவிட்டால் உன்னைக் கொன்று விடுவேன் என்று மிரட்டினான்.

1902 -ஆம் ஆண்டு ஜீலை 5-ம் நாள் மரியா வீட்டில் தனியே கிழிந்த துணியைத் தைத்துக் கொண்டு இருந்தார். அப்பொழுது வயலில் இருந்து வந்த அலெக்சான்ட்ரோ தன் கையில் வைத்திருந்த கூரியக் கத்தியைக் காண்பித்து அவளை உள்ளே போ என்று சொன்னான். அவள் அதை செய்ய வில்லை என்று தெரிந்தவுடன்

சமையலறையில் இழுத்துக் கொண்டுபோய் காமவெறியுடன் 14முறை கத்தியால் குத்தினான். உயிருக்குப் போராடிய மரியா மறுநாள் ஜீலை 6-ஆம் நாள் இறந்து விட்டாள். அதற்கு முன் "நான் அலெக்சான்ட்ரோவை மன்னிக்கிறேன், என் முழு மனதுடன் மன்னிக்கிறேன்" என்று கூறிவிட்டு சென்றார்.

அலெக்சான்ட்ரோ 29 ஆண்டுகள் சிறைத் தண்டனையை பெற்றான். அதன்பின் அவனுடைய மனம் கல்லாகிப் போனது. எந்தவிதமான வருத்தமும் இல்லாமல் அவன் வாழ்ந்து கொண்டு இருக்கையில் அவனுடைய கனவில் மரியா தோன்றி ஆறுதல் சொன்னார். அதன் பின் மனம்மாறி, சிறையில் இருந்து வெளியேற, மரியாவின் தாயிடம் மன்னிப்பு கேட்டு, கப்புச்சின் சபையில் பணிவிடை செய்யும் நோக்குடன் சேர்ந்தான்.

மரிய கொரெற்றிக்கு 1950-ஆம் ஆண்டு ஜீன் 25-ல் புனிதை பட்டம் வழங்கப்பட்டது. அந்நிகழ்ச்சியில் மரியாவின் தாயாரும் சகோதர சகோதரிகளும் கலந்து கொண்டனர். ஒருவர் புனிதர் பட்டம் பெரும் விழாவில் அவரது தாய் பங்கேற்பது இதுதான் முதல் தடவை என்று அப்போது திருத்தந்தையாக இருந்த 12-ஆம் பத்திநாதர் கூறினார். இச்சிறுமியின் எளிய வாழ்க்கை இன்றைய உலகினருக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக திகழட்டும்.

எழுமின் . . .
விழிமின் . . .
இலக்கு அடையும் வரை
தயக்கம் கொள்ளாது
தடை காணாது
தொய்வு இல்லாது
தொடர்ந்து . . . பயணித்திடு!
துணிந்து ஓடிடு . . .

– சுவாமி விவேகானந்தர்




**வியாகுல அன்னையின் புனித கபிரியேல்**

காலம் :- கி.பி 1838 - 1862

விழா :- பிப்ரவரி 27

# 3. வியாகுல அன்னையின் புனித கபிரியேல்

புனித கபிரியே உலக நோக்குடையவராய் வாழ்ந்தார். விருந்துகள், நடனங்கள், நாடகங்களை நேசித்தார். வீட்டில் எல்லோரும் இவருக்கு அஞ்சுவார்கள். இவர் கெட்டவரும் அல்ல மிகுந்த பக்தியுள்ளவருமல்ல, ஒவ்வொரு நாளும் பூசை காண்பார். செபமாலை செபிப்பார். வேறு பல செபங்களையும் சொல்வார்.

மாசற்ற மரியாள் மீதும், ஆண்டவரது பாடுகள் மீது நற்கருணை மீதும் இவருக்குப் பக்தி உண்டு. கடவுள் இவருக்குப் பொல்லாத நோயை அனுப்பினார். தேவதாய் தன்னைச் சுகப்படுத்துவாளானால் நான் துறவியாவேன் என்று வாக்களித்தார். பூரண சுகம் கிடைத்தது. என்றாலும் துறவியாகாமல் காலத்தைக் கடத்தினார். மாதா திரும்பவும் புதுமையா


Saint Stanislas de Kostka.

# 4. புனிதர் ஸ்தனிஸ்லாஸ் கோஸ்கா

இயேசு சபை புனிதர்களுள் மூன்று இளவல்கள் (இளைஞர்கள்) இருந்தனர். அவர்கள் புனித ஞானபிரகாசியார், புனித ஜான் பெர்க்மான்ஸ் மற்றும் புனித தனிஸ்லாஸ் கோஸ்காவும் ஆவர். இவர் போலந்து நாட்டில் பிறந்தார். இவரும், இவருடைய அண்ணன் பவுலும் கல்வி கற்க ஆஸ்திரியாவின் தலைநகர் வியான்னாவிலுள்ள இயேசு சபைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர். அங்கு விடுதியில் தங்கி படித்துக்கொண்டு இருந்த போதே 7மாதங்களுக்குப் பிறகு அவ்விடுதியை அரசாங்கம் எடுத்துவிடவே இருவரும் லூர்து சபையினரான ஜிம்பர்க்கர் என்பவருடைய வாடகை விடுதியில் தங்கினர்.

நாள்தோறும் காலையிலும், மாலையிலும் செபமாலை சொல்வதிலும், செபம் செய்வதிலும் மிகுந்த ஆர்வம் காட்டினார். இது அண்ணன் பவுலுக்குப் பிடிக்கவில்லை. இவர் அண்ணன் உலக ஆடம்பர வாழ்க்கை வாழ்ந்து வந்தான். தன் தம்பியின் போக்கு, தன் குடும்பக் கௌரவத்திற்கே இழுக்கு என்று எண்ணி, தன் நண்பர்களோடு சேர்ந்து தம்பியை எள்ளி நகையாடினான்.

அண்ணணின் கொடுமை தாங்க முடியாமல் ஸ்தனிஸ்லாஸ்க்கு உடல் நிலை சரியில்லாமல் போனது, மிகவும் மோசமான நிலையில் ஸ்தனிஸ்லாஸ் இருக்கவே இவர் இறந்து விடுவாரோ என்ற பயம் அனைவருக்கும் ஏற்பட்டது. அதற்கு முன் புதுநன்மை வாங்க வேண்டும் என்ற எண்ணம் அவருக்கு இருந்தது. இதை தன் அண்ணணிடம் பலமுறை சொல்லியும் அதை பற்றி பவுல் சிறிதளவும் கவலை பட வில்லை. இதை அறிந்த நன் மரணத்தின் பாதுகாவலர் புனித பார்பரா இரு வானதூதர்களுடன் அவருக்கு முன் தோன்றி புதுநன்மை வழங்கினார்.

அதே போல் இன்னொரு நாள் புனித கன்னி மரியா பாலன் இயேசுவுடன் அவர் கனவில் தோன்றினார். ஸ்தனிஸ்லாசின் கையில் குழந்தை இயேசுவை வைத்தார். இத்தோடு மரியன்னை அவரை இயேசு சபையில் சேரச் சொன்னார்.

நோய் முழுவதும் குணமடைந்த பிறகு தம் விருப்பத்தை வியான்னாவிலுள்ள இயேசு சபை மாநிலத் தலைவரிடம் சொன்னார். அவரோ உன் அப்பாவிடம் அனுமதிப் பெற்று வா என்று சொன்னதும், தன் அப்பா ஒரு சிறிதளவு கூட இதை அனுமதிக்கமாட்டார் என்பதால் இன்னொரு இயேசு சபை குருவிடம் இதைச் சொன்னார். அவர்

அருகில் உள்ள ஜெர்மனிக்குச் சென்று இயேசு சபை மாநிலத் தலைவரிடம் கேள் என்று கூறினார்.

பரதேசியைப் போல் ஆடையணிந்து கொண்டு மாறுவேடத்தில் தன் அண்ணன் பவுலுடனும் அவருடைய நண்பர்களுடனும் ஜெர்மனிக்கு சென்றார். அதன் பின் ஆக்ஸ்பர்க் நகருக்குச் சென்றார். அங்குள்ள தலைவர் டிலிங்கள் நகருக்குச் சென்றிருந்த படியால் ஸ்தனிஸ்லாஸ் அங்குச் சென்றார். அங்கு மாநிலத் தலைவர் புனித பேதுரு கனிசியுஸ் அவரை வரவேற்று ஏற்றுக் கொண்டார். அவர் இவரை இரு சகோதரர்களுடன் உரோமுக்கு அனுப்பிவைத்தார்.

உரோமில் இயேசு சபைத் தலைவராக இருந்தவர் புனித பிரான்சிஸ் போர்ஜியா ஸ்தனிஸ்லாசை ஒரு நவதுறவியாக ஏற்றுக்கொண்டார். நவதுறவியாக 10மாதங்கள் தான் வாழ்ந்தார். அதில் அவர் ஆறுதலும் மகிழ்ச்சியையும் அடைந்ததற்கு அளவேயில்லை. இதயத்தில் பற்றியெறிந்த இறையன்பைத் சொல்லிக் கொள்ள வார்த்தையேயில்லை. உடல்நிலை சரியில்லாமல் படுத்துவிடார்.

ஆகஸ்ட் மாதம் மரியன்னையின் விண்ணேற்பு நாளில் இறந்து போகிறேன் என்று கூறினார். அதனால் ஆகஸ்ட் 14-ஆம் நாள் நோயில் பூசுதல் கொடுத்து விட்டார்கள். நற்கருணை உண்டபின் தம்மைத் தரையில் படுக்க வைக்கச் சொன்னார்.

"**என் உள்ளம் தயாராக இருக்கிறது**" என்று பாடிக்கொண்டு ஆவியை இறைவனின் கரங்களில் ஒப்படைத்தார். இப்புனிதர் போலாந்து நாட்டின் பாதுகாவலர் என்று அழைக்கப்படுகிறார்.

மதம் மனிதனைப் பண்படுத்துவதற்கே தவிர
மதம் மனிதனைப் புண்படுத்துவதற்காக அல்ல,
அடுத்தவர் மீது ஆயுதம் செலுத்துவது மதவெறி,
அடுத்தவர் மீது அன்பு செலுத்துவது மதநெறி.

– வலம்புரி ஜான்



**குழந்தை இயேசுவின் புனித தெரசாள்**

காலம்:- கி.பி. 1873 - 1897

விழா:- அக்டோபர் 1

## 5. குழந்தை இயேசுவின் புனித தெரசாள்

புனித குழந்தை தெரசாள் 1873-ஆம் ஆண்டு பிறந்து 1889-ஆம் ஆண்டில் கார்மேல் சபையில் சேர்ந்தார். 1895-இல் நவ கன்னியரைக் கண்காணிக்கத் தொடங்கினார். 9 ஆண்டுகள் துறவியாய் வாழ்ந்தார். பெரியோர்களுக்குக் கீழ்படிந்து தன் சுயசரிதையை எழுதி வைத்திருக்கிறாள். "**அன்புக்குச் சிறந்த பதில் அன்பே**" என்பது இவளது விருது வாக்கியம். இச்சொற்கள் இவள் கண்முன் என்றும் நின்றன. துன்பங்களைச் சகிக்க இவை இவளுக்குப் பலம் பெற்றுத் தந்தன. கடவுளைத் தந்தையாக மதித்து அன்பு செய்தாள்.

சிறு பிள்ளையின் கையில் பந்துபோல இவள் தன்னைக் கடவுளிடம் ஒப்படைத்தாள். சிறுவன் பந்தை சுவரில் அடிக்கலாம், தரையில் போட்டு விளையாடலாம். அதே போல் கடவுள் தம் பிரியம் போல் தன்னை நடத்த இவள் விட்டு விடாள்.

சிறு வயதில் இவள் ஒருமுறை கோவிலுக்குச் சென்று செபிக்கையில் செப புத்தகத்திலிருந்து ஒரு படம் கீழே விழுந்தது. சிலுவையில் தொங்கிய இயேசு அதில் வரையப்பட்டு இருந்தது. இயேசுவின் இரத்தம் பலருக்கு வீணாய் போகிறதே என்று அன்றிலிருந்து ஏங்கி வாடினாள். மனந்திரும்ப மறுத்த ஒரு கொலைக்காரனை மனம் திரும்பும்படி தனது உணவு, உறக்கம், வேலை, விளையாட்டு என அனைத்தையும் செபமாக மாற்றினார்.

பனிக்கட்டி போல் ஆத்துமங்கள் நரகத்தில் சேதமாகிக் கொண்டிருக்கின்றன நம் இயேசு கண்ணீர் வடிக்கிறார். அவருடைய கண்ணீரைக் துடைப்பதற்குப் பதிலாக அற்பக் காரியங்களுக்காகச் சண்டையிட்டுக் கொண்டிருக்கிறோ என்பாள்.

இவளுக்குக் காச நோய் வந்தது. "நான் இறந்து போவேன் கணக்குக் கொடுக்க இயேசுவின் முன் செல்வேன். பெரியவர்களிடம் போகும் போது வெறுங்கையோடு போகக்கூடாது. ஏதாவது காணிக்கை கொண்டு போக வேண்டும். நான் செபித்து ஒறுத்தல் செய்து மனந்திரும்பிய ஒரு பாவியின் ஆன்மாவை என் கையில் எடுத்து செல்வேன். என் முயற்சியால் நரகத்தில் ஒரு ஆள் குறைந்தது. மோட்சத்தில் ஒரு ஆள் அதிகரித்தது எனக் காணும் இயேசு என்னை உடனே மோட்சம் எடுத்துக் கொள்வார்" என்று தெரசாள் தன் அக்காளுக்கு எழுதினாள்.

"மோட்சத்துக்குப் போன பின் அங்கு நான் சும்மா இருக்க மாட்டேன். பூமி மீது ரோசா மலரை மாரிபோல் பொழிவேன். அதாவது ஏராளமான புதுமைகள் செய்வேன்" என்று சொன்னபடி புதுமைகள் செய்து வருகிறாள். 30.9.1897 அன்று இறந்தார்.

சிந்தனை: "**பாவிகளைக் காப்பாற்றவும், குருக்களுக்காகச் செபிக்கவுமே நான் கார்மேல் சபையில் சேரப் போகிறேன். இயேசுவை நேசிப்பேன். ஆன்மாக்களைக் காப்பாற்றுவதும், மக்கள் இயேசுவை நேசிக்கச் செய்வதுமே பூமியில் எனது ஒரே வேலை .**"

வாய்மையே வெல்லுமடா நேர்
வழியே நாமும் செல்லுவோமடா
நேர்மையும் நீதியும் நிமிர வைக்கும்
நிலையினிலே நம்மை உயர வைக்கும்
நேருக்கு நேர் உண்மை பேச வைக்கும் . . . !
போகும் பாதையில் மாறாதே உன்
பொறுப்பை என்றும் மறவாதே . . . !
வேகத்தைச் சிறிதும் குறைக்காதே
விவேகத்தை மட்டும் இழக்காதே . . . !

– மருதகாசி

மனதில் உறுதி வேண்டும்,
வாக்கினில் இனிமை வேண்டும்,
நினைவில் நல்லவை வேண்டும்,
நெருங்கின பொருள் கைப்பட வேண்டும்,
உண்மை நின்றிட வேண்டும்.

– பாரதியார்




**முத்.சகோ. அல்போன்சா**

காலம் :- கி.பி. 1910 - 1946

விழா :- ஜீலை 28

## 6. முத்.சகோ. அல்போன்சா

முத்.சகோ. அல்போன்சா கேரளாவில் கோட்டயம் மாவட்டத்திலுள்ள குடமாளுர் என்னும் சிற்றூரில் 1910 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 19-ஆம் தேதி ஜோசப் முத்துப்பாடம், மிரியம் இவர்களுக்கு மகளாகப் பிறந்தார். நான்காவது பிள்ளையாகப் பிறந்த இவருக்குப் பெற்றோர் கொடுத்த பெயர் அன்னா. சில நாட்களிலே தாயை இழந்தார். அதனால் பெரியம்மாவிடம் வளர்ந்தார். இவரைப் படிக்க வைக்கும் பொறுப்பை இவரின் மாமா ஏற்றுக்கொண்டார்.

சிறு வயதிலேயே அன்னாவுக்குப் புனித சிறுமலர் தெரெசாவை மிகவும் பிடிக்கும். அவளைப் போல புனித வாழ்க்கை நடத்த வேண்டும் என்பது அன்னாவின் கனவு. அதனால் செபத்திலும், தவத்திலும் தன்னையே ஈடுபடுத்தி ஒரு துறவியாக வரும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். ஆனால் அவளுடைய 18-ஆவது வயதில் அவளுக்குத் திருமணம் முடிக்க வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்தார் அவளின் வளர்ப்புத் தாயார்.

திருமண நிச்சயதார்த்தம் நெருங்கி வருவதை அறிந்த அன்னா தன் காலை நெருப்பில் வைத்து காயப்படுத்திக் கொண்டார். இதையறிந்த வளர்ப்புத் தாய் திருமணம் என்ற பேச்சை எடுக்கவில்லை. அன்னாவின் விருப்பப்படி துறவற சபையில் சேர அனுமதிப் கொடுத்தார்.

1928 ஆம் ஆண்டு பாலாய் மறைமாவட்டதிலுள்ள பரணங்ஙானம் என்னும் ஊரிலுள்ள புனித கிளாராள் சபையில் துறவற வேட்பாளராகச் (Postulant) சேர்ந்தார். அப்பொழுது அன்னா என்னும் தன் பெயரைத் துறந்து அல்போன்சா என்னும் துறவறப் பெயரைப் பெற்றார். 2 ஆண்டுகளுக்குப் பின் 1930 மே மாதம் 19-ஆம் தேதியில் துறவற உடை அணிந்தார்.ஆறாண்டு பயிற்சிக்குப் பின் 1936 ஆம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 12-ஆம் தேதி நிரந்தர வார்த்தைப் பாட்டைக் கொடுத்து புனித கிளாராள் சபையின் முழு உறுப்பினர் ஆனார்.

அதன் பின் 10ஆண்டுகள் தான் வாழ்ந்தாள். ஆயினும் இவர் பெரிய காரியம் செய்ததாக சொல் அளவிலும் இல்லை ஏட்டிலும் இல்லை. இந்த 10 வருடமும் மிக துயரம் மிகுந்த காலமாக இருந்தது. நோய்வாய்ப்பட்டு பாயும் படுக்கையுமாக இருந்தார். சகோதரி அல்போன்சா 1935- ஆம் ஆண்டு இறக்கும் தருவாயில், உயிருக்குப் போராடிய நிலையில், மருத்துவர்களும் கைவிட்டு விட்டனர்.

ஆயினும் சாவரா குரியாக்கோஸ் அடிகளார் பேரில் மிக்க நம்பிக்கை வைத்திருந்தமையால் நவநாள் வைத்து ஜெபிக்கத் தொடங்கினார். நவநாள் முடிவதற்குள் அல்போன்சா முற்றிலும் குணம் பெற்றார். சாவரா குரியாக்கோஸ் அடிகளாருக்கு முத்திப்பேறு பட்டம் கொடுப்பதற்கு இதுவும் ஒரு காரணம்.

எந்நேரமும் நோய்வாய்ப்பட்டிருந்த இச்சகோதரியை மற்ற சகோதரிகளுள் சிலர் கேலி செய்வது வெகு சாதாரணமாகி விட்டது. ஆயினும் அவர்களை வெறுக்கவோ, குறை கூறவோ இல்லை மாறாக அன்பாக நடந்து கொண்டாள். இது மற்றவர்களுக்கு வியப்பாக இருந்தது. சகோ.அல்போன்சா லிசியு நகர் புனித தெரசாவைக் கண்டுபாவித்தார். தான் இறப்பதற்கு முன் தமக்கு இன்னும் அதிக துன்பங்கள் கிடைக்க வேண்டுமென்று வேண்டிக்கொண்டது போன்று வெள்ளிக்கிழமை தோறும் சொல்லொண்ணா வேதனை அடையத் தொடங்கினார். வயிறு பசிக்கும் ஆனால் சாப்பிட முடியாது. அந்த நாட்களில் திவ்விய நற்கருணை மட்டுமே அவளுக்கு உணவு. இது பிறருக்கு ஆச்சரியமாக இருந்தது.

துன்ப நேரத்தில் அவர் கூறிவந்ததெல்லாம் இதுதான். "நான் என்னை முற்றிலுமாக இயேசுவுக்குக் கையளித்துவிட்டேன், அவருடையத் திருவுளப்படி நடக்கட்டும். இவ்வுலகில் எனக்கு ஒரே ஒரு ஆசைதான். இறைவனுடைய அன்பை அடைய வேண்டும். அதற்காக எவ்வளவு துன்பம் வேண்டுமானாலும் அடைவேன்" என்று சொல்லி 1946 ஆம் ஆண்டு ஜீலை 28-ஆம் நாள் இறந்தார். கேரள நாட்டின் கமலம் என அழைக்கப்படுபவர் சகோதரி அல்போன்சா. 1986- ஆம் ஆண்டு பெப்ருவரி 8- ம் நாள் திருத்தந்தை இரண்டாம் ஜான்பால் இவருக்கும் சாவரா குரியாக்கோஸ் அடிகளாருக்கும் முத்திப்பேறு பட்டம் வழங்கினார்.

விருது வாக்கு:- "**ஆண்டவரே, நான் இன்னும் அதிகமாகத் துன்புற வேண்டும். உமக்காக நான் இன்னும் அதிகமாக மனிதரால் இகழப்பட வேண்டும்.**"

சிந்தனைக்கு: நுகர்வுக் கலாச்சாரத்தில் மூழ்கிக் கிடப்போருக்குச் சகோதரி அல்போன்சாவின் வார்த்தைகள் ஒரு சாட்டை அடி. ஒருவருடைய போதனையால் மட்டுமல்ல, படும் துன்பத்தினாலும் இறையரசைக் கட்டி எழுப்ப முடியும் என்பது சிறுமலர் புனித தெரசாவினுடைய வாழ்க்கையிலிருந்து சகோதரி அல்போன்சா கற்றக்கொண்ட பாடம்.



**புனித மரியா பவுஸ்தீனா கோவால்ஸ்கா**

காலம் :- கி.பி. 1905 - 1938

விழா :-  அக்டோபர் 05

## 7. புனித மரியா பவுஸ்தீனா கோவால்ஸ்கா

புனித மரியா பவுஸ்தீனா கோவால்ஸ்கா போலந்து நாட்டிலுள்ள ஓர் ஏழை விவசாயக் குடும்பத்தில் பிறந்தார். திருமுழுக்கின் மூலம் இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் ஹெலனா. தொடக்கக் கல்வியை சொந்த ஊரிலே கற்றார். 9-ஆவது வயதில் புதுநன்மை எடுத்த பின் 3ஆண்டுகள் பக்கத்து ஊரிலுள்ள பள்ளியில் படித்தார். மேற்கொண்டு படிப்பதற்கு குடும்ப வறுமை இடமளிக்கவில்லை. மேலு தம்பி, தங்கைகளையும் காப்பாற்ற வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. அதனால் பக்கத்து நகருக்கு சென்று வீடுகளில் வேலை செய்து வந்தார்.

20-ஆம் வயதில் இயேசு காட்சியளித்து துறவற சபைக்கு அழைத்ததை உணர்ந்தார். 1925-ஆம் ஆண்டில் இரக்கத்தின் அன்னையின் சகோதரிகள் என்னும் துறவற சபையில் சேர்ந்து ஹெலனா என்னும் பெயரை மரியா பவுஸ்தீனா என்று மாற்றிக்கொண்டார்.

இவருக்கு சமையல் வேலையெல்லாம் கைவந்த கலை. நன்கு சமைத்து கொடுப்பார். கன்னியர் மடத்துத் தோட்டங்களில் திறமையுடன் வேலை செய்து, மற்ற நேரங்களில் வாயில் காப்பவராகவும் பணிபுரிந்து வந்தார். எனவே துறவறத்தில் எந்தப் பணி செய்தாலும் அது இறைப்பணி தான் என்று எண்ணி வாழ்ந்தார். அவளுடைய ஆன்மீக வாழ்வு பிறருடைய வாழ்விலிருந்து முற்றிலும் மாறுபட்டதாகவே இருந்தது.

இறைவன் முன் நறுமணம் கமழும் தூபம் போல் இருந்தது. எளிய வேலைகளைச் செய்யும் நேரத்தில் இறைவனோடு செபத்தில் ஒன்றித்திருந்தார். இயேசு பல முறை இவருக்கு காட்சியளித்ததோடு, தமது ஐந்து காயங்களையும் பதிய வைத்தார். இது பிறரின் கண்களுக்குத் தெரியாது. மேலும் இயேசுவின் திரு இருதயத்திலிருந்து பாய்ந்தோடிய தண்ணீர், இரத்தம் இவற்றின் அடையாளமாக இரு ஒளிக்கதிர்கள் புறப்பட்டு வருவதுபோல் காட்சியில் கண்டார். இவர் துறவறத்தில் 13 ஆண்டுகள் தான் வாழ்ந்தார்.

புனிதை பவுஸ்தீனாவுக்கு நற்கருணையின் பேரில் தனிப்பட்ட பக்தியிருந்தது. அது இயேசுவின் இரக்கத்தின் அருள் அடையாளம். இந்த இரக்கத்தை எடுத்துரைப்பதே எனது பணி (Mercy my mission)


என்று கூறி இறை இரக்கத்தின் திருத்தூதராக வாழ்ந்து வந்தார். காசநோயினால் துன்புற்றிருந்த போது தமது துன்பங்கள் யாவற்றையும் இயேசுவின் அன்பிற்கு எதிராக செய்யப்படும் பாவங்களுக்குப் பரிகாரமாக ஒப்புக்கொடுத்து வந்தார். 1938 அக்டோபர் 5-ஆம் நாள் இவர் இறந்தார்.

திருத்தந்தை 2-ஆம் ஜான்பால் 1993-ஆம் ஆண்டு ஏப்ரல் 18-ம் தேதி முத்திபேறு பட்டமும் மாபெரும் யூபிலி ஆண்டு 2000 ஏப்ரல் 30-இல் புனிதை பட்டமும் வழங்கியுள்ளார்.

திருத்தந்தை உயிர்ப்பு ஞாயிறுக்கு அடுத்து வரும் ஞாயிறு இறை இரக்க ஞாயிறு என்று அறிவித்துள்ளார். இறை இரக்கத்தின் செபமாலை பக்தியும், பிற்பகல் மூன்று மணியை இறை இரக்கத்தின் நேரமாக கருதும் வழக்கமும் உள்ளது.

சிந்தனை: **இரக்கத்தின் செபமாலை பக்தியையும், பிற்பகல் மூன்று மணியை இரக்கத்தின் நேரமாக கடைப்பிடிக்கும் பழக்கத்தையும் உலக சமாதானத்திற்காக ஒப்புக்கொடுப்போம்.**


ஓரறிவு பெற்ற மரங்கள் கூட
மீண்டும் துளிப்போம் என்ற நம்பிக்கையில்
இலையுதிர்க்கும் போது
ஆறறிவு கொண்ட உனக்கு மட்டும்
ஏன் இந்த அவநம்பிக்கை?
உன்னால் தண்ணீரைக் கூட
சல்லடையில் அள்ள முடியும் . . .
அது உறையும் வரைக் காத்திருந்தால்.



**புனித லீமா ரோஸ்**

காலம்:- கி.பி. 1586 - 1671

விழா :- ஆகஸ்ட் 23



## 9. புனித ஆக்னெஸ்

புனித ஆக்னெஸ் அழகு மிகுந்தவள். ஒரு செல்வந்தருடைய மகள். இவளை மணமுடிக்க பலர் விரும்பினர். "கடவுளை என் பத்தாவாக நான் தேர்ந்தெடுத்திருக்கிறேன்: அவரைச் சரீரக் கண்களால் பார்க்க முடியாது" என்று ஆக்னெஸ் சொல்லி அவர்களது விருப்பத்திற்கு இணங்க மறுத்தாள். இவள் கிறிஸ்தவள் என அதிகாரிகளிடம் குற்றஞ்சாட்டினர். உபாதிக்கும் இடத்திற்கு அவள் மகிழ்ச்சியுடன் சென்றாள்.

கிறிஸ்தவ வேதத்தை விட்டுவிடு உன்னை மணந்து கொள்கிறேன். என உரோமை நகரத் தலைவனின் மகன் மொழிந்தான். அவளோ "வானதூதர்கள் பணிபுரியும் இயேசுவின் பத்தினி நான்" என்றாள். அவளது கற்பைக் கெடுக்கும் படி வந்த துஷ்ட வாலிபர்கள் அவளைக் கண்டதும் திகில் அடைந்து பின் வாங்கினர். ஒரு துஷ்டன் துணிச்சலுடன் முன்னேறினான். அவன் குருடனாகி நடுக்கமுற்று கீழே விழுந்தான். அவளை வெட்டிக் கொல்லும்படி அதிகாரி ஒரு சேவகனுக்கு உத்தரவிட்டான். "ஆண்டவரே, இதோ நான் உம்மிடம் வருகிறேன், உம்மையே நான் அன்பு செய்கிறேன்: உம்மையே நான் தேடினேன். உமக்காகவே ஏக்கத்துடன் காத்திருக்கிறேன்" என்று கூறி ஆக்னெஸ் உயிர் நீத்தாள்.

சிந்தனை:- "**எனது இரத்தத்தால் உனது வாளை நீ கறைப்படுத்தலாம், ஆனால் கிறிஸ்துவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட என் உடலைக் கறைப்படுத்த யாராலும் முடியாது.**"- புனித ஆக்னெஸ்.

உன்னையறிந்தால், நீ உன்னையறிந்தால்
உலகத்தில் போராடலாம்.
உயர்ந்தாலும் தாழ்ந்தாலும்,
தலை வணங்காமல் நீ வாழலாம்.

உப்பு கரைந்தால் தான் சுவை
மெழுகு கரைந்தால் தான் ஒளி
சந்தனம் வெட்டப்பட்டால் தான் மணம்.



**புனித ஜோன் ஆப் ஆர்க்**

காலம் :- கி.பி. 1412 - 1431

விழா :- மே 30

## 10. புனித ஜோன் ஆப் ஆர்க்

புனித ஜோன் ஆப் ஆர்க் பிரான்ஸ் நாட்டில் உள்ள லொரெயின் என்ற இடத்தில் தொமரெமி என்னும் கிராமத்தில் கி.பி.1412-ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 6-ஆம் தேதியில் பிறந்தார். ஜாக் - இசபெல் தம்பதியருக்கு ஐந்தாம் மகளாக பிறந்தாள். சிறு வயதிலேயே அதிதூதரான புனித மிக்கேல், புனித கத்தரீன், புனித மார்கரீத் இவர்களது குரலைக் கேட்டாள். 12 வயதிலேயே தனக்கு கேட்ட விசித்திரமான குரல்களுக்கு செவிமடுத்து வந்தாள். தொடக்கத்தில் அவர்கள் அளித்த செய்திகள் பொதுவானவை. 1428-ஆம் ஆண்டு மே மாதம் அந்த குரல்கள் ஒரு கட்டளையைப் பிறப்பித்தன. "உடனே போய், பிரான்ஸ் நாட்டு மன்னருக்கு உதவி செய். அவர் தம் நாட்டைத் திரும்பப் பெற துணை புரிவீராக" என்ற கட்டளையேற்று தன் பணியினை தொடங்கினாள். அவளுக்கு எதிர்ப்பு ஏற்பட்டது திருச்சபை அதிகாரிகளும் அரசனுடைய ஆட்களும் அவளை எதிர்த்தார்கள். பிரெஞ்சுப் படைகளை வழிநடத்தி ஆங்கிலர்களிடம் இருந்து நாட்டை காப்பாற்ற வேண்டும். இறைவன் படைகளின் ஆணடவர்! கடைசியாக அவளிடம் ஒரு சிறு இராணுவம் ஒப்படைக்கப்பட்டது.

அதன் உதவியால் ஜோன் 1429ஆம் ஆண்டு ஜீலை மாதம் 17-ஆம் தேதியில் ஆர்லியன்ஸ் நகரைக் காப்பாற்றினாள். இன்னொரு நகரைக் காக்கப் போர் செய்கையில் இவளைப் பிடித்து ஆங்கிலேயரிடம் கையளித்தார்கள். அரசன் ஏழாம் சார்லசை அரியணையில் அமரச் செய்திட்ட போது இவளுக்கு வயது 19. பொறாமையினால் இவள் சூனியக்காரி என்றும், கடவுளின் பெயரை தவறாக பயன்படுத்தினாள் என்று எரித்துக் கொல்ல தீர்ப்படப்பட்டாள். 1431-ஆம் ஆண்டு மே மாதம் 30-ஆம் தேதி இவள் தனது சொற்களால் நடுவர்களைத் திகைக்கச் செய்தாள் என்றாலும் இவளைச் சாவுக்குத் தீர்ப்பிட்டு சுட்டு எரித்தனர். இவளால் அரியணையேறிய ஏழாம் சார்லசு மன்னர் இதனை கண்டு கொள்ளவில்லை. பின்னர் இவள் குற்றமற்றவள் என்பதை கண்டு திருச்சபை 1909ம் ஆண்டு அருளாளர் பட்டத்தையும், 1920ம் ஆண்டு புனிதைப் பட்டத்தையும் கொடுத்து சிறப்பு செய்தது. 19 வயதிலேயே அரசியலில் மாபெரும் புரட்சியை கொண்டு வர முடிந்தது. இறைவனின் குரலாகவே செயல்பட்டு, இறை நம்பிக்கையுடனே தன் வாழ்வை அற்புதமாக வாழ்ந்து காட்டினாள் இப்புனிதை.

சிந்தனை: **புனித ஜோன் ஆப் ஆர்க் போன்று நாமும் நம் தாய் நாட்டை உண்மையாக நேசிப்போம் ஜெபிப்போம்.**



**புனித லீமா விட்ரோ**

காலம் :- கி.பி. 1235 -1252

விழா:- நவம்பர் 14

# 11. புனித லீமா விட்ரோ


புனித லீமா விட்ரோவின் பெற்றோர் ஏழைகள். பக்தியுள்ளவர்கள். ஏழு வயதிலேயே ரோஸ் தவ முயற்சிகள் செய்து தேவதாயின் கட்டளைக்குக் கீழ்ப்படிந்து 10-ஆம் வயதில் பிரான்சிஸ்கன் மூன்றாம் சபையில் சேர்ந்தாள். மக்கள் தவம் செய்ய வேண்டும் என்று வித்தர்பேர் நகர் தெருக்களில் பிரசங்கிக்கத் தொடங்கினாள்.

விசுவாசிகள் பாப்பானவருக்குப் பிரமாணிக்கமாயிருக்க வேண்டும். பட்டணத்தைக் கைபற்றியிருக்கும் ஜெர்மனியின் பேரரசன் இரண்டாம் பிரடெரிக் என்பவனை எதிர்க்க வேண்டும் என்று நகர மக்களைத் தூண்டி அதிக வல்லமையோடும் அதிகாரத்தோடும் பேசினாள், பல புதுமைகள் செய்தாள், இதைக் கண்ட அதிகாரி இவளையும் இவள் குடும்பத்தினரையும் நகரிலிருந்து வெளியேற்றினான். அதன் பின் இவள் ஊர் ஊராய் போய், பாப்பானவரை ஆதரித்துப் பேசினாள். வருங்காரியங்களை முன்னறிவிப்பாள். பேரரசன் பத்து நாட்களுக்குள் சாவான் என்று அறிவித்தாள். ஓர் ஊரில் மாந்திரீகப் பெண் நகர மக்களில் அநேகரைக் கெடுத்துக் கொண்டிருந்தாள். ரோஸ் ஒரு புதுமை செய்து அவளை மனந்திருப்பினாள். மூன்று மணி நேரமாக நெருப்பில் நின்றாள். இவளுக்கு எந்தவித தீமையும் ஏற்படவில்லை. ஏழைக் கிளாரம்மாள் சபைக் கன்னியர் இவளை ஏற்றுக்கொள்ள மறுத்தனர்.

இவளோ நகருக்கு வெளியே போய் ஒரு குடிசையில் தனி வாழ்வு நடத்தி வந்தாள். நான் இறந்த பின் ஏழைக் கிளாராம்மாள் மடத்தில் ஏற்றுக் கொள்ளப்படுவேன் என்று அவள் முன்னறிவித்தாள். அது அப்படியே நடந்தது. அடுத்த ஆண்டு வசந்த காலத்தில், 17-ஆம் வயதில் ரோஸ் இறந்தாள்.

4-ஆம் அலெக்சாந்தர் பாப்பு அவளது உடலை ஏழைக் கிளாரம்மாள் மடத்தில் புதைக்க வேண்டும் என உத்தரவிட்டார்.

சிந்தனை:- **திருத்தந்தை தவறா வரமுடையவர். அவருக்காக நாம் செபிப்பதும் திருச்சபையின் கோட்பாடுகளை வாழ்வாக்குவதும் நமது கடமை ஆகும்.**



**புனித கொன்சாகா ஞானப்பிரகாசியார்**

காலம் :- கி.பி.1568 - 1591

விழா :- ஜீன் 21

## 12. புனித கொன்சாகா ஞானப்பிரகாசியார்

புனித கொன்சாகா ஞானப்பிரகாசியார் அரச குடும்பத்தைச் சேர்ந்தவர். இவர் தாயின் உதரத்தில் இருக்கும் போதே இவருக்குத் திருமுழுக்குக் கொடுக்கப்பட்டது. ஒன்பது வயதில் மாதாவின் பீடத்தின் முன் நின்று தன் கன்னிமையைக் கடவுளுக்கு அர்ப்பணித்தார். பதினோராவது வயதில் புதுநன்மை வாங்கினார். ஓர் அரச அரண்மனையில் வளரும்படி இருவருக்கு ஏற்பாடுகள் செய்தனர்.

உலக மகிமைகளும், இன்ப சுகங்களும் தம்மை இழுக்க இவர் விட்டுவிட வில்லை. இவர் இயேசு சபையில் சேர விரும்புவதாக தெரிவித்தார். எதிர்ப்பு அதிகமாக இருந்தது. அதை மேற்கொண்டு தமது சொத்துக்களையெல்லாம் தம்பிக்கு விட்டு விட்டு இயேசு சபையில் சேர்ந்தார். துறவற வாழ்வின் தொடக்கத்திலிருந்தே ஏனைய சந்நியாசிகளுக்கு இவர் ஓர் எடுத்துக்காட்டாக விளங்கினார். உடல் எடுத்த சம்மனசு போல காணப்பட்டார்.

உரோமையில் ஏற்பட்ட ஒரு கொடியக் கொள்ளை நோயின் போது இவர் மருத்துவமனைகளுக்குச் சென்று சேவை செய்தார். தனது 25-ஆம் வயதில் இவர் உலகில் இருக்கும் போது விடாமல் கடவுளோடு ஒன்றித்திருந்தார்.

ஒவ்வொரு நாளும் ஒரு மணி நேரம் செபத்தியானம் செய்வார். சில நேரங்களில் ஐந்து மணி நேரம் கூட செபிப்பார். அவர் விரும்பி அனுசரித்த புண்ணியம் தேவ சித்தத்திற்கும் பெரியவர்களுக்கும் கீழ்படிந்து நடப்பதே. இதனால் ஒப்புயர்வற்ற அமைதி இவரது உள்ளத்தில் இருந்தது. "கோணலான இரும்புக் கம்பி நான். அதை சரிப்படுத்தவே நான் துறவற சபையில் சேர்ந்திருக்கிறேன்" என்று இவர் சொல்வார். மூன்று மாதமாக கொடிய வேதனைப்பட்டு தனது 25-ஆம் வயதில் இறந்தார்.

சிந்தனை: **நான் உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவன் என்று யாரும் பெருமை பாராட்டக்கூடாது. ஏழைகளைப் போலவே பிரபுக்களும் தூசியாகிறார்கள். பிரபுக்களின் உடல் அதிக துர்நாற்றம் வீசுகிறது.**



**புனித பெர்க்மான்ஸ் அருளப்பர்**

காலம் :- கி.பி. 1599 - 1621

விழா :- ஆக்ஸ்ட் 13

## 13. புனித பெர்க்மான்ஸ் அருளப்பர்

புனித பெர்க்மான்ஸின் தந்தை காலணிகள் செய்து வந்தார். அருளப்பர் இளம் வயதிலேயே மிகுந்த பக்தியுள்ளவர். ஞான போதகங்களுக்கு மிகுந்த கவனத்துடன் செவிக்கொடுப்பார். வெள்ளிக்கிழமைதோறும் மாலையில் வெறும் காலுடன் நடந்து சிலுவைப்பாதை செபிப்பார்.

17 வயதில் இயேசு சபையில் சேர்ந்தார். இவர் மிகுந்த பக்தியும், புத்தியும் உள்ளவராதலால் கல்வி கற்க இவரை உரோமைக்கு அனுப்பினார்கள். தோழனோடு சேர்ந்து 900 மைல் நடந்து உரோமை சென்றடைந்தார் . போய் சேர பத்து வாரங்கள் ஆயிற்று. அங்கு புனித ஞானபிரகாசியார் வசித்த அறையே இவருக்கு தரப்பட்டதால் மிகவும் மகிழ்ந்தார். ஏனெனில் புனித ஞானப்பிரகாசியாரின் வாழ்க்கை வரலாற்றைப் படித்ததின் விளைவாகவே இவர் இயேசு சபையில் சேர்ந்தார்.

"கடவுளுக்கும் பெரியவர்களுக்கும் மிகுந்த கவனத்துடன் நான் செவிசாய்ப்பேன். இப்பொழுது நான் புனிதராகாவிட்டால் ஒருபொழுதும் புனிதராக மாட்டேன்" என்று இவர் அடிக்கடி சொல்வார். தேவதாய் மீது இவருக்கு அதிக பக்தியுண்டு. சிறப்பாக அவளது அமல உற்பவத்துக்கு இவர் மிகுந்த வந்தனை செய்து வந்தார். கோயிலில் இருந்த அவளது திருச்சுரூபத்தை ஒவ்வொரு நாளும் சந்திப்பார். சபையின் சட்டங்களுக்கு நுணுக்கமாய் கீழ்படிந்தார்.

சபையின் சட்டங்களுக்கு கீழ்படிவதற்கு ஏற்ப, ஆன்ம வாழ்வில் முன்னேற்றம் ஏற்படும் என்பார். கடவுள் மீது மிகுந்த அன்புள்ளவர், எப்பொழுதும் மகிழ்ச்சியோடு இருப்பார்.

சிந்தனை : "**பாடுபட்ட சுரூபம், செபமாலை, சபையின் சட்ட புத்தகம் இவைகளை என்னிடம் கொடுங்கள். நான் அமைதியாக இறப்பேன்**".

பணத்தை இழந்தால் சக்கேயுவாக மாறலாம்,
பதவியை இழந்தால் மத்தேயுவாக மாறலாம்,
பட்டத்தை இழந்தால் பவுலாக மாறலாம்,
அனைத்தையும் இழந்தால் இயேசுவின் சீடனாகலாம்.



**புனித ஜான் போஸ்கோ**

காலம் :- கி.பி. 1815 - 1888

விழா :- சனவரி 31

# 14. புனித ஜான் போஸ்கோ

ஜான் போஸ்கோ பிறந்ததும் வளர்ந்ததும் இத்தாலி நாட்டின் வடபகுதியில் டூரின் நகருக்கு பக்கத்திலுள்ள பெக்கி என்னும் சிற்றூரில் 1815 ஆகஸ்ட் 16 அன்று அவர் பிறந்தார். அவரது இரண்டாவது வயதிலேயே அவரின் தந்தை காலமானார். ஆகவே, தாய் மார்கரெட்டின் அரவணைப்பில் அவர் வளர்ந்து வந்தார். அவர்களுடைய குடும்பம் மிகவும் ஏழ்மையில் இருந்தமையால் தாயாரால் சிறுவனை படிக்க வைக்க முடியவில்லை. சிறுவன் ஜானுக்கோ படிப்பில் ஆர்வம். இதைக் கவனித்த அந்த ஊர்க் குருவானவர் ஜானைப் படிக்க வைத்தார். ஆனால் அவரது உடல் நிலை திடீரென பாதிக்கப்பட்டு அந்த குருவானவரும் இறந்து விட்டார். இந்நிலையில் பிழைக்க வேறு வகையறியாது ஜான் தையல் கடையிலும், தச்சுப்பட்டறையிலும் வேலை செய்து வந்தார்.

அவருடைய 9-ஆவது வயதில் ஒரு கனவு கண்டார். ஒளிமயமான ஒருவர் அவருடைய தாயாருக்கும் ஜானுக்கும் முன் தோன்றினார்கள். அந்தத் தாய், கட்டுக்கடங்காத வனவிலங்குகள் செம்மறிகளைப் போல் சாந்தமாகுவதை, ஜானுக்குக் காட்டி கவனிப்பாரற்றுத் திரியும் சிறுவர்களைக் கவனிப்பது தான் அவரது வாழ்வின் பணி என உணரச் செய்தார். அதன்பின் சிறுவர்களை ஒன்று சேர்த்து அவர்களுக்குச் சிறு சிறு கதைகளைச் சொல்வதும், வித்தைகளைக் காட்டுவதும் ஜானுக்கு வழக்கமாயிற்று. தம் 16-ஆவது வயதில் பள்ளிப் படிப்பை முடித்ததும் குருமடத்தில் சேர்ந்தார்.

இவர் குரு மடத்துக்கு செல்வதற்கு முந்திய நாள் குருத்துவ மாணவ உடையுடன் தன் தாயின் முன் நின்றார். தாய் தன் கரங்களை அவர் தோள் மீது வைத்து "உன்னை இந்த உடையில் காண்பது எனக்கு மிகமிக மகிழ்ச்சி அளிக்கிறது. குரு நிலைக்கு மகிமையளிப்பது உடையல்ல, புண்ணிய வாழ்வு என்பதை என்றும் நினைவில் வைத்திரு. மகனே நீ பிறந்ததும் உன்னை தேவதாய்க்கு அர்ப்பணித்தேன். நீ கல்வி கற்க தொடங்கிய போதும், அந்த தேவ தாயிடம் தான் மன்றாடினேன். எனவே உனது சங்கடங்கள் அனைத்திலும் தேவதாயிடமே போ. இப்பொழுது அன்னையை உன் அரசியாக தெரிந்து கொள்ளும்படி உன்னை இறைஞ்சுகிறேன் என்றாள். 1841-ஆம் ஆண்டில் தம் 26-ஆவது வயதில் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார்.

ஜான் போஸ்கோ குருப்பட்டம் பெற்றபின், கைவிடப்பட்ட சிறுவர்களுக்காக உழைக்கத் தொடங்கினார். இப்படியாக முதலில் 6, பின்னர் 20,80, 150 என இளம் சிறார்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக்கொண்டே போயிற்று. இவ்வாறு உருவெடுத்ததுதான் இளைஞர்களுக்கான ஆரட்டரி (Oratary) எனப்படும். இளைஞர்கள் ஒன்றுகூடி தங்கிப் படிக்கும் இல்லம். சிறுவர்களிடமும் இளைஞர்களிடமும் இயல்பாகவே மறைந்துள்ள ஆற்றலுக்கு நல்ல வடிகால் அமைத்துக் கொடுத்தால், அவர்கள் தீய வழிகளில் செல்லமாட்டார்கள் என்பது ஜான் போஸ்கோவின் உறுதியான நம்பிக்கை.

தவறு செய்யும் சிறுவர்களைத் தண்டனையால் அல்ல, மாறாக அன்பால் திருத்த வேண்டும் என்பது தான் ஜான் போஸ்கோவின் கல்விப் பணிகளுக்கு எல்லாம் ஆணிவேராக அமைந்திருந்தது. இதுதான் அவருடைய **தடுத்து ஆற்றுப்படுத்துதல்** (Preventive System) என்பது. அச்சமயம் 150 வாலிபர்கள் அவருடன் இருந்தனர். இதைப் பார்த்த பினார்டி என்பவர் பாழடைந்து கிடந்த கொட்டகை ஒன்றை அவருக்கு வழங்கினார். இந்த கொட்டகைதான் சலேசியன் நிறுவனங்களுக்கு எல்லாம் முன்னோடி.

இளைஞர்களை கவனிக்கவும் அவர்களுக்குக் கல்வி புகட்டவும் ஒரு துறவற சபையைத் தொடங்க வேண்டுமெனப் பல ஆண்டுகளாக ஆவல் கொண்டிருந்த போஸ்கோவுக்குப் துறவற சபை ஒன்றைத் தொடங்க உத்தரவு கிடைத்தது. ஆண்களுக்கு சலேசிய சபையை நிறுவியது போல் பெண்களுக்கும் ஒரு சபையை மேரி மசரெல்லோ என்னும் புனிதையின் துணையுடன் அவர் நிறுவியுள்ளார். கிறிஸ்தவர்களின் சகாய மரியின் புதல்வியர் என அழைக்கப்படும் இச்சபைதான் இன்று பெண்களுக்கான துறவற சபைகளில் மிகப் பெரியது.

உழைப்பின் மிகுதியினால் ஜான் போஸ்கோவின் உடல்நலம் குறைந்துகொண்டே வந்தது. 1888- சனவரி 31-ஆம் நாள் காலையில் மரணம் அடைந்தார். இன்று அவர் இளைஞர்களின் பாதுகாவலராக விளங்குகிறார்.

விருது வாக்கியம்:- **ஆண்டவரே ஆன்மாக்களை எனக்குத் தாரும். ஏனைய அனைத்தையும் எடுத்துக்கொள்ளும்.**

சிந்தனை:- தவறு செய்யும் இளைஞர்களை தண்டனையினால் அல்ல, அன்பால் திருத்துவோம்.